## IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR

Date : 05.02.2026

SC. 48/2020

**அ.சா 9 – ராஜசேகர் ( SI – Police ஓய்வு)**

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ம் நாள் **ராஜசேகர்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **ராஜசேகர்** | தந்தை பெயர் | ராமன் |
| வயது | 60 | கிராமம் | – |
| வட்டம் | சேலம் | மாவட்டம் | சேலம் |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**( சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை)**

**குறுக்கு விசாரணை :**

1. இவ்வழக்கின் புகார் வாக்குமூலம் கடந்த 05.10.2019 ம் தேதி காலை 10.30 மணியைபோல் பதிவு செய்யப்பட்டு , காலை 11.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நானாகவே சென்றேன். நான் அன்றைய தினமே சம்பவ இடத்தை பார்வையிட்டு மதியம் 12.30 மணியைபோல் பார்வை மகஜர் தயார் செய்தேன். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தை சுமார் 1.00 மணிநேரமாக தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகஜரில் சம்பவ இடத்தில் கத்தி கிடந்ததாக குறிப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தயார் செய்த மாதிரி வரைபடத்தில் கத்தி இருப்பதாக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் அந்த கொடுவாளை மதியம் 2.00 மணியைபோல் கைப்பற்றியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2. அன்றைய தினமே அ.சா 1 யிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . அந்த வாக்குமூலத்தை நான் சம்பவ இடத்தில் வைத்து பெற்றேன். அன்றைய தினமே , மகாலட்சுமி , கல்யாண குமார் , அடுல் மேனன் சௌத்ரி @ நாகா , ஸ்ரீதர் , முத்துகுமார் , கருணாகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளும் , அ.,சா 1 முதல் 5 வரை சொன்ன வாக்குமூலங்களுக்கும் வேறுபாடு இல்லை என்றால் சரிதான். அ.சா 1, 2 ஆகிய சாட்சிகளிடம் கைப்பற்றிய ஆயுதத்தை காட்டி மறுவாக்குமூலம் எதுவும் செய்யவில்லை. மருத்துவர் திருமதி. ஆயுஷா சுல்தானா என்பவர் கடந்த 14.10.2019 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். கடந்த 05.10.2019 ல் இருந்து 14.10.2019 வரை இடைப்பட்ட காலத்தில் நான் சாட்சிகள் எதுவும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கையும் பார்வையிட்டேன். அ.சா 1, 2 க்கு சிகிச்சை வழங்கிய குணம் மருத்துவமனை மருத்துவர்களை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. எக்ஸ் ரே, ஸ்கேன், டிஸ்சார்ஜ் சம்மரி ஆகியவற்றை பெற்று நான் இந்த வழக்கு கோப்புடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்தவொரு வாக்குமூலத்தையும் பெறாமல் நானாகவே சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை தயார் செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து வெட்டப்பட்ட வாழைமரங்கள் எதையும் கைப்பற்றவில்லை. வாழைமரம் பக்கத்தில் தான் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரிதான். நான் தயார் செய்த மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்தில் இருந்து சுமார் 10 அடி தூரத்தில் வேப்பமரம் உள்ளது என்றால் சரிதான். கொடுவாளுக்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும், அந்த கொடுவாளால் அ.சா 1,2 சாட்சிகள் தாக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா 1 க்கு சிறிய கிழிந்த காயமும், அ,சா 2 க்கு இடது கை விரலுக்கு உட்பகுதியில் எலும்வு முறிவும், ஏற்பட்டுள்ளது என்றால் குறிப்பாக காயம் பற்றியும் , அதன் தன்மை பற்றியும் என்னால் கருத்து சொல்ல இயலவில்லை.

3. மருத்துவரை கடந்த 14.10.2019 ம் தேதி விசாரித்து விட்டு கடந்த 14.10.2019 ம் தேதி காயச்சான்றை பெற்றேனா கடந்த 19.10.2019 ம் தேதி பெற்றேனா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. இவ்வழக்கின் சம்பவத்தை பட்டியல் சாட்சி 1 முதல் 4 வரையான சாட்சிகள் காயம்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 1 முதல் 4 வரையான சாட்சிகள் சம்பவ இடம் வாழைமரத்தில் இருந்து 4 முதல் 4 1/2 அடி தூரத்தில் சம்பவம் நடைபெற்றதாக கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், நான் எவ்வித மறுவாக்குமூலமும் பெறாமல் ,நானே சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் விசாரித்த சாட்சிகள் அனைவரும் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பதால் , நான் தயார் செய்த வாக்குமூலத்தில் தவறான சங்கதிகளை கூறியுள்ளார் என்றால் சரியல்ல. சாட்சிகள் எனது விசாரணையில், சம்பவம் பேபிரிகேசன் ஸ்டீல் கம்பெனி அருகே உள்ள வழியில் நடந்ததாக கூறியுள்ளார்கள். பண்டிகையான ஆயுத பூஜை காலம் என்பதால் வேப்பமரத்தில் மேலே ஏறி அ,சா 2 கிளைகளை ஒடிக்கும் போது அவருக்கும், அவரது தந்தைக்கும் அடிப்பட்டதை பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சான்றுபொருட்களும் புகார் தரப்பினர்களிடம் இருந்து கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சரிவர முதல் நிலை புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur